# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 46/2022 நாள்: 16.02.2022

### நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் - 2022

**நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தொடர்பாகவும், நடமாடும் பாதுகாப்பு அலுவலர்கள், பறக்கும் படைகள், வாக்கு பதிவு நடைபெறும் வாக்குச்சாவடி பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள், பதற்றமான மற்றும் மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகளில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள், வாக்கு எண்ணிக்கை மையங்களில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்வதை உறுதி செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று (16.02.2022) நடைபெற்றது.**

தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகள் என 648 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நடைபெறவுள்ள தேர்தலில், வாக்குப்பதிவு நாளான 19.02.2022 அன்று வாக்குச்சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணுகை நாளான 22.02.2022 அன்று, வாக்கு எண்ணும் மையங்களில் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதி செய்வது குறித்து, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ.பழனிகுமார், இ.ஆ.ப.,(ஓ) அவர்கள் தலைமையிலும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையச் செயலாளர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப.,அவர்கள் முன்னிலையிலும், இன்று (16.02.2022) காவல்துறை தலைமை அதிகாரிகள், சென்னை மாநகராட்சி ஆணையர், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட தேர்தல் பார்வையாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தொடர்பாகவும், மொபைல் பார்ட்டி, பறக்கும் படைகள், வாக்கு பதிவு நடைபெறும் வாக்குச்சாவடி பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள், பதற்றமான மற்றும் மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகளில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள், வாக்கு எண்ணிக்கை மையங்களில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்வதை உறுதி செய்வது குறித்து விவாதிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையர், திரு.ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., பெருநகர சென்னை காவல் ஆணையாளர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., தாம்பரம் காவல் ஆணையர்/காவல்துறை கூடுதல் இயக்குநர், திரு.எம்.ரவி, இ.கா.ப., ஆவடி காவல் ஆணையர்/ காவல்துறை கூடுதல் இயக்குநர், திரு.சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப., காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) திரு.பி.தாமரைக்கண்ணன், இ.கா.ப., கூடுதல் காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) திரு.ஜி.வெங்கட்ராமன், இ.கா.ப., காவல்துறை தலைவர் (தொழில்நுட்பம்) திருமதி.மகேஸ்வரி, இ.கா.ப.,பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) திரு.விசுமகாஜன், இ.ஆ.ப., சென்னை தேர்தல் பார்வையாளர்கள், திரு.வி.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., திரு.எ.ஜான் லூயிஸ், இ.ஆ.ப., டாக்டர்.டி.மணிகண்டன்.இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட தேர்தல் பார்வையாளர் திரு.பி.கணேசன், இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட தேர்தல் பார்வையாளர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர், டாக்டர்.ஆல்பிஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.ஏ.ஆர்.ராகுல்நாத்,இ.ஆ.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி.கு.தனலெட்சுமி, முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு.கி.அ.சுப்பிரமணியம், சட்ட ஆலோசகர் திரு.க.வெங்கடேசன், உதவி ஆணையர் (தேர்தல்) திரு.அகஸ்ரீ.சம்பத்குமார் மற்றும் ஆணைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

16/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்